بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் – இலண்டன்.**

JULY 19
2013

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

# திருக்குர்ஆனும் ரமலானும்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல்பக்கராவின் 186வது வசனத்தை ஓதினார்கள்:**

شَہۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡہِ الۡقُرۡاٰنُ ہُدًی لِّلنَّاسِ وَبَیِّنٰتٍ مِّنَ الۡہُدٰی
وَالۡفُرۡقَانِ ۚ فَمَنۡ شَہِدَ مِنۡکُمُ الشَّہۡرَ فَلۡیَصُمۡہُ ؕ وَمَنۡ کَانَ مَرِیۡضًا اَوۡ عَلٰی سَفَرٍ
فَعِدَّۃٌ مِّنۡ اَیَّامٍ اُخَرَ ؕ یُرِیۡدُ اللّٰہُ بِکُمُ الۡیُسۡرَ وَلَا یُرِیۡدُ بِکُمُ الۡعُسۡرَ ۫
وَلِتُکۡمِلُوا الۡعِدَّۃَ وَلِتُکَبِّرُوا اللّٰہَ عَلٰی مَا ہَدٰىکُمۡ وَلَعَلَّکُمۡ تَشۡکُرُوۡنَ ۝۱۸۶

*பொருள்: ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பெற்ற மாதமாகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக்கூடியதும் (நன்மை தீமையை) பிரித்தறியக்கூடியதும் ஆகும். எனவே, உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ பயணியாகவோ இருப்பவர் (விட்டுப்போன நோன்பை) மற்ற நாள்களில் கணக்கிட்டு (நோற்கவும்). அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான். உங்களுக்குக் கடினத்தை (த்தர) விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனைப் பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான். (2:186)*

ரமலான் மாதம் ஒரு முஸ்லிமின் வாழ்க்கையில் பலமுறை வருகின்றது. செயல்படுகின்ற முஸ்லிமுக்கு ரமலான் மாதத்தில் தான் திருக்குர்ஆன் இறங்க ஆரம்பித்தது என்பதும் தெரியும். ஓரளவு அறிவுள்ள நற்செயல்களைச் செய்கின்ற ஒரு முஸ்லிமுக்கு ரமலான் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் ஒவ்வொரு வருடமும் அந்த சமயம் வரை எந்த அளவு குர்ஆன் இறங்கி இருந்ததோ அதனை ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஓத அதனை பெருமானார் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து மீண்டும் ஓதி வந்தார்கள் என்பது கூட தெரியும். பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்நாளின் இறுதி வருடத்தில் திருக்குர்ஆன் அவர்கள் மீது முழுமையாக இறக்கப்பட்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து,

اَلۡیَوۡمَ اَکۡمَلۡتُ لَکُمۡ دِیۡنَکُمۡ وَاَتۡمَمۡتُ عَلَیۡکُمۡ نِعۡمَتِیۡ وَرَضِیۡتُ لَکُمُ الۡاِسۡلَامَ دِیۡنًا ؕ

*இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்துள்ளேன். (5:4)*

என்ற நற்செய்தி கிடைத்த இந்த இறுதி வருடத்தில் மட்டும் ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்களின் அறிவிப்பில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த முறை ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களுடன் சேர்ந்து திருக்குர்ஆன் முழுவதையும் இருமுறை நான் ஓதி முடித்தேன் என்று கூறியதாக வந்துள்ளது. எனவே திருக்குர்ஆனுக்கு ரமலான் மாதத்துடன் ஒரு சிறப்பான தொடர்பு இருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் ரமலான் வருகின்ற போது இது திருக்குர்ஆன் இறங்கிய மாதமாகும் என்று அது நமக்கு கவனமூட்டுகிறது. ரமலான் நமக்கு அதன் மற்ற அருள்களுடன் சேர்த்து இந்த மாதத்தில் திருக்குர்ஆன்

இறங்கியுள்ளது என்பதை நமக்கு நினைவூட்டுவதற்காகவும் வருகின்றது. இப்போது நான் ஓதிய வசனத்தின் முதல் பகுதி தொடர்பாக சிலவற்றைக் கூறுவேன். அதன் அடுத்த பகுதி பற்றி எதுவும் இப்போது கூறமாட்டேன்.

இந்த மகத்தான வேத நூலில் மனிதர்களுக்கு மகத்தான நேர்வழி காட்டக்கூடிய போதனைகள் உள்ளன என்பதையும் ரமலான் நமக்கு நினைவூட்டுகின்றது. இதில் உண்மைக்கும், பொய்யிற்கும் இடையில் ஒளிமயமான அடையாளங்கள் மூலம் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது என்பதையும் அது நமக்கு நினைவூட்டுகின்றது. நோன்பு கடமை ஆக்கப்பட்டுள்ளதில் எந்த அளவு முக்கியத்துவம் இருக்கின்றது? அதை எவ்வாறு நோற்க வேண்டும்? என்பதையும் அது நமக்கு நினைவூட்டுகின்றது. திருக்குர்ஆனின் போதனைகள் முழுமையாகவும் நிறைவாகவும் இருக்கின்றது என்பதையும் அது நமக்கு நினைவூட்டுகின்றது. இந்த நினைவூட்டலின் ஆன்மாவைப் புரியக் கூடியவர்களாக நாம் இருந்தால் தான் இந்த எல்லா நினைவூட்டல்களும் நமக்கு பலன்தரக்கூடியவையாக இருக்கும். அவ்வாறில்லையென்றால், ரமலான் மாதம் ஒவ்வொரு வருடமும் வருகின்றது; வந்து கொண்டே இருக்கும் இன்சா அல்லாஹ்.

ரமலானுக்கும் குர்ஆனுக்கும் இடையிலுள்ள தொடர்பு எப்போதும் நமக்கு நினைவூட்டப்படும். எப்போது ரமலான் வந்தாலும் அது நமக்கு இதை நினைவூட்டிக் கொண்டிருக்கும். நாம் இதன் முக்கியத்துவத்தைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருப்போம். நமது செயல் மூலம் இதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் போது தான் இந்த நினைவூட்டல்கள் நமக்கு நற்பலனைத் தரும்.

شَهْرُ رَمَضَانَ الَّذِيْ أُنْزِلَ فِيْهِ الْقُرْآنُ *ரமலான் மாதம் குர்ஆன் இறக்கப்பட்ட மாதமாகும் (2:186)* என்ற சொறகளைக கேட்டதுமே திருககுாஆன் நமது கைகளில் வரும்போது தான் இந்த நோக்கம் நிறைவேற முடியும். நாம் அதிகமதிகம் அதை ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்துவோம். திருக்குர்ஆன் கூறும் கருத்துக்களைப் புரிவதற்கும் அதை சிந்திப்பதற்கும் நாம் முயற்சி செய்யும் போதுதான் ரமலானின் இந்த நினைவூட்டலின் நோக்கம் நிறைவேறும். அதன் மூலம் هُدًى لِّلنَّاسِ *இது மக்களுக்கு நேர்வழி காட்டக்கூடியதாக இருக்கின்றது (2:186)* என்பதன் உண்மை நமக்கு தெளிவாகத் தெரியும். ரமலானுக்கும் திருக்குர்ஆனுக்கும் இடையிலுள்ள தொடர்பு நாம் குறிப்பாக திருக்குர்ஆனின் கட்டளைகளை முயற்சி செய்து இந்த மாதத்தில் தேடும்போதுதான் நமக்கு தெளிவாகத் தெரிய வரும்.

எனவே, திருக்குர்ஆனின் கட்டளைகளைத் தேடுங்கள் என்பதை ரமலான் நமக்கு நினைவூட்டுகின்றது. திருக்குர்ஆனின் கட்டளைகளை தேடி அவற்றை தெரிந்து கொண்ட பிறகு அவற்றை நமது வாழ்வில் செயல்படுத்தி அதனை வாழ்வின் ஓர் அங்கமாக ஆக்கிக் கொள்வதை ரமலான் நமக்கு நினைவூட்டுகின்றது. ரமலான் நமக்கு திருக்குர்ஆனின் போதனையின் ஒளியில் அல்லாஹ்வுக்குரிய உரிமையைச் செலுத்துவதற்கு முன்பை விட அதிகமாக முயற்சி செய்ய வேண்டும் என்பதை நினைவூட்டுகின்றது. அல்லாஹ்வை வணங்குவதற்குரிய உரிமையைச் செலுத்தும் போது தான் அல்லாஹ்வுக்குரிய உரிமையைச் செலுத்த முடியும். தொழுகைகளைப் பாதுகாத்தவாறு முறையாக அதற்குரிய நேரத்தில் தொழும்போது தான் அல்லாஹ்வை வணங்குவதற்குரிய உரிமையை நாம் செலுத்த முடியும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தொழும் போது தான் இந்த உரிமையை நாம் செலுத்த முடியும். மேலும் நஃபில்களை நிறைவேற்றுவதிலும் அல்லாஹ்வை நினைவு கூர்வதிலும் வலுவாக ஈடுபடும் போது தான் இந்த உரிமையை நாம் செலுத்த முடியும்.

எனவே, இந்த உரிமையைச் செலுத்த முயற்சி செய்யுங்கள். அதன் மூலம் நீங்கள் இறைவனுக்கு அருகில் சென்று விட வேண்டும். அதன் மூலம் நீங்கள் உங்களை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்ல வேண்டும். அதன் மூலம் இறைவனுக்கும் அடியானுக்கும் இடையிலுள்ள தூரம் முடிந்து விட வேண்டும். அந்த கயிற்றை நீங்கள் வலுவாகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். அதன் ஒரு முனை இறைவனின் கையில் இருக்கின்றது. அதன் அடுத்த முனையை தனது நெருக்கத்தைத் தேடும் அடியார்களுக்காக அவன் பூமியில் தொங்க விட்டிருக்கின்றான் என்பதை ரமலான் நமக்கு நினைவூட்டுகின்றது. யார் அந்த கயிற்றைப் பிடிப்பாரோ அவர் இறைவன் வரை சென்று விடுவார். அல்லாஹ் فَإِنِّيْ قَرِيْبٌ *நான் அருகில் இருக்கின்றேன் (2:187)* என்று கூறுவதை ரமலான் நமக்கு நினைவூட்டுகின்றது.

எனவே உங்களது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்தி இந்த நெருக்கத்திலிருந்தும் அருளைப் பெறுங்கள். அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதில் நாம் முன்பை விட அதிகமாக முயற்சி செய்ய வேண்டும் என்பதை ரமலான் நமக்கு நினைவூட்டுகின்றது. திருக்குர்ஆனில் அடியார்களுக்கு செலுத்த வேண்டிய என்னென்ன உரிமைகள் கூறப்பட்டுள்ளனவோ அவற்றை செலுத்த முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் அந்நியர்களின் உரிமையைச் செலுத்துவது பற்றி மிக அதிகமாக நமக்கு கவனமூட்டியுள்ளான். முஸ்லிம்கள் பரஸ்பரம்

தங்களுக்கிடையில் رُحَمَاءُ بَيْنَهُمْ *அவர்கள் தங்களுக்கு இடையில் கருணையுடன் நடந்து கொள்வர் (48:30)* என்பதற்கேற்ப உரிமைகளைச் செலுத்துவது பற்றி கூறப்பட்டிருக்கின்றது. சில மக்கள் நம்மவர்களுக்கிடையில் செலுத்த வேண்டிய உரிமைகளை மறந்து விடுகின்றனர். தங்களுக்கு மிக நெருக்கமானவர்கள், இரத்த உறவுகள் ஆகியவர்களுக்குள்ள உரிமைகளைச் செலுத்துவதற்கு அவர்கள் மறந்து விடுகின்றனர். எனக்கு சில சமயங்களில் பெண் பிள்ளைகளிடமிருந்து கடிதங்கள் வருகின்றன. அவற்றில் தாய், தந்தையர், ஆண் பிள்ளைகள் மற்றும் பெண் பிள்ளைகள் ஆகியோருடன் நடந்து கொள்ளும் முறையில் வித்தியாசம் காட்டுகின்றனர் என்று எழுதப்பட்டிருக்கின்றது. சொத்துக்களை தமது வாழ்நாளிலேயே இவர்கள் பங்கிட்டுக் கொடுக்கும் போது சில சமயங்களில், சில குடும்பங்களில் பெண் பிள்ளைகளுக்கு எதுவும் கொடுக்காமல் இருந்து விடுகின்றார்கள். ஆண் பிள்ளைகளுக்கு அவற்றை கொடுத்து விடுகின்றனர். தாங்கள் உண்மையாளர்கள் என்பதை நிரூபிப்பதற்காக பெண் பிள்ளைகளிடம் சொத்துக்களை நாங்கள் மகனுக்கு கொடுத்து விட்டால் அதில் உனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லைதானே என்று அவர்கள் கேட்கத்தான் செய்கின்றனர்.

சில பெண் பிள்ளைகள் நாங்கள் வெட்கப்பட்டவாறு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறியதாக எழுதுகின்றனர். இதனால் நீதி நிலைநாட்டப்பட்டு விட்டது என்று பெற்றோர்களே கருதுகின்றனர். ஆனால் இது நீதி அல்ல. மாறாக இது அநீதியாகும். திருக்குர்ஆனின் தெளிவான கட்டளைக்கு எதிரான செயலாக இது இருக்கின்றது. இந்த காலத்திலும் கூட இப்படிப்பட்ட பெற்றோர்கள் இருப்பது வியப்பாக இருக்கின்றது. அவர்கள் அநீதியிழைக்கின்றனர். தாய் தந்தையரின் மகிழ்ச்சிக்காக தியாகங்கள் செய்கின்ற இத்தகைய பெண் பிள்ளைகள் இக்காலத்தில் இருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. ஆனால் அந்தப் பெண் பிள்ளைகளும் இதை நினைவில் கொள்ள வேண்டும். இவ்விசயத்தில் உள்ளத்தால் அவர்கள் மகிழ்ச்சி அடையவில்லை என்றால் பிறகு இத்தகைய தியாகங்களைச் செய்கின்ற பெண் பிள்ளைகள் இதன் மூலம் தங்கள் தாய் தந்தையரைப் பாவிகளாக ஆக்குகின்றார்கள். நான் அத்தகைய அநீதியிழைக்கின்ற தாய் தந்தையரிடம் மீண்டும் கூறுகின்றேன். அவர்கள் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தை தங்களது உள்ளத்தில் உருவாக்க வேண்டும். சுயநலத்தில் முன்னேறியுள்ள இத்தகைய சகோதரர்கள் பெற்றோரை வற்புறுத்தி சொத்துக்களை அபகரித்துக் கொள்கின்றனர். சகோதரிகளுக்கு ஒன்றும் வழங்காமல் இருந்து விடுகின்றனர். அவர்களும் தமது வயிறுகளில் நெருப்பின் ஜுவாலையைத்தான் நிரப்புகின்றனர். எனவே எப்போதும் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். மேலும் தங்களது சீர்திருத்தத்தின் பக்கம் இவர்கள் கவனம் செலுத்த வேண்டும். நான் இந்த விளக்கத்தை எடுத்துக் கூறியது இதை கூறுவது அவசியமானதாக இருக்கின்றது என்பதனாலேயாகும்.

பிறகு மீண்டும் நான் ரமலான் நமக்கு எவைகளின் பக்கம் கவனமூட்டுகின்றது என்பதன் பக்கம் வருகிறேன். நாம் ரமலானை அடைகின்ற போது திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் ஒவ்வொரு முஸ்லிமும் தன்னிடம் தியாகத்திற்கான ஆன்மாவை உருவாக்க வேண்டும் என்பதை நினைவூட்டுவதற்காகவே ரமலான் வருகின்றது. இறைவனுக்காகவும் இறைவனுடைய ஜமாஅத்திற்காகவும், அஹ்மதிய்யா கிலாஃபத்தை நிலைநாட்டுவதற்காகவும் உயிர், பொருள், நேரம், கண்ணியம் ஆகியவற்றை தியாகம் செய்வதாக நாம் செய்துள்ள உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக நம்மை ஆய்வு செய்து பார்த்தவாறு அதனை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். எந்த அளவு நமது உடன்படிக்கையை நாம் நிறைவேற்றியுள்ளோம் என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எந்த அளவு இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கான உணர்வு உள்ளத்தில் இருக்கின்றது என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இந்த தியாகங்களைச் செய்வது தொடர்பாக திருக்குர்ஆனில் என்ன கட்டளைகள் உள்ளன? அவற்றை நீங்கள் தேட வேண்டும். ஒருவர் மற்றவருக்காக செய்யும் தியாகமும் இருக்கின்றது. இது பற்றி என்ன கட்டளை இருக்கின்றது என்பதை தேட வேண்டும்.

நமது எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு இந்த உலகை அழிவிலிருந்தும் இறைவன் வெறுப்படைவதிலிருந்தும் காப்பாற்றுவதற்காக எந்த அளவு வேதனை இருந்தது என்பதன் பக்கம் கவனமூட்டுவதற்காகவும் இந்த ரமலான் வருகின்றது. அதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவன் முன்னிலையில் மன்றாடி அழுதவாறு எத்தகைய வேதனை நிறைந்த துஆக்களை செய்திருக்கின்றார்கள்? நாம் அதற்கான உரிமையைச் செலுத்த எவ்வாறு முயற்சி செய்ய வேண்டும்? எந்தப் பணியை இறைவன் ஹிரா குகையில் வைத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்து பிறகு குகையிலிருந்து வெளியில் வந்து அந்தப் பணியைச் செய்து முடிக்கும்படி அன்னாருக்கு கட்டளையிட்டானோ அதாவது வேதனை நிறைந்த துஆக்களை செய்தவாறு திருக்குர்ஆனின் போதனைகளை உலகில் பரப்புகின்ற அந்த பணியை பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரி, அவர்களின் கட்டளை ஆகியவற்றிற்கு ஏற்ப நாம் எவ்வாறு நிறைவேற்றியுள்ளோம்? என்பதன் பக்கம் கவனமூட்டவே ரமலான் வந்துள்ளது. அல்லாஹ்வின் தூதுச் செய்தியைப் பரப்புங்கள் என்ற திருக்குர்ஆனின் இந்த போதனைக்கேற்ப

நாம் எப்படி செயல்பட வேண்டும்? இறைவனுடைய ஏகத்துவத்தை உலகில் பரப்புங்கள். பரப்பிக் கொண்டே செல்லுங்கள். هُدًى لِّلنَّاسِ *இது மக்களுக்கு நேர்வழி காட்டக் கூடியதாக இருக்கின்றது (2:186)* என்ற தூதுச் செய்தியை எல்லாருக்கும் பொதுவானதாக ஆக்குவதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஹிரா குகையில் தனிமையில் இருப்பதை கண்முன் நிறுத்தியவாறு சிந்திக்கும் போது தான் உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குவது தொடர்பான சரியான அறிவு உங்களுக்கு கிடைக்கும் என்பதை நினைவூட்டவே ரமலான் வருகின்றது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது நாங்கள் அன்பு வைத்துள்ளோம் என்பது உங்களது வாதமாக இருந்தால், பிறகு பெருமானார் (ஸல்) அவர்களது முன்மாதிரியின் ஒவ்வொரு அம்சத்தையும் கண்முன் நிறுத்தியவாறு அதற்கேற்ப செயல்பட முயற்சி செய்ய வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டவே இந்த மாதம் வந்துள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்கள் رَضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ *அல்லாஹ் அவர்களிடம் திருப்தி அடைந்தான். அவர்கள் அல்லாஹ்விடம் திருப்தி அடைந்தனர் (98:9)* என்ற உயர் தகுதியை எப்படி பெற்றனர்? என்பதை தேட வேண்டும் என்பதை இம்மாதம் நினைவூட்டுகிறது. ஏனென்றால் இந்த சஹாபாக்களும் நமக்கு முன்மாதிரியாக இருக்கின்றனர். உங்களை நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திற்கு கொண்டு செல்வதற்கு முயற்சி செய்யுங்கள் என்பதை நமக்கு நினைவூட்டுவதற்காகவும் இந்த மாதம் வந்துள்ளது. பெருமானார் (ஸல்) அவர்களது காலத்திற்கு நம்மால் செல்ல முடியாது. ஆனால் திருக்குர்ஆனின் போதனை நமக்கு முன்னால் அதன் அசல் வடிவத்தில் இருக்கின்றது. அது அந்த காலம் வரை நம்மை கொண்டு சேர்க்கும் வழிகளை எளிதாக்கி விட்டது. உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கான உண்மையான போதனைகளும் திருக்குர்ஆனில் தான் உள்ளது என்பதை உலகிற்கு எடுத்துக் கூறுங்கள். உலகில் அமைதியை நிலைபெறச் செய்வதற்கான முழுமையான முன்மாதிரி பெருமானார் (ஸல்) அவர்களே ஆவார்கள் என்பதை உலகிற்கு எடுத்துக் கூறுங்கள் என்பதை இந்த மாதம் நமக்கு நினைவூட்டுகிறது.

திருக்குர்ஆன் மட்டும் தான் தனது ஒவ்வொரு கட்டளை தொடர்பாகவும் ஆதாரத்துடன் பேசுகிறது என்பதை நினைவூட்டுவதற்கு இந்த மாதம் வந்துள்ளது. இதற்காக நாம் சுயமாகவும் திருக்குர்ஆனை படிப்பதும் அதன் விளக்கவுரைகளைச் சிந்தித்துப் பார்ப்பதும் அவசியமானதாகும். எந்த மக்கள் தொடர்பாக திருக்குர்ஆனில்,

اَلَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَتْلُوْنَهٗ حَقَّ تِلَاوَتِهٖ

*எவர்களுக்கு நாம் வேதத்தை வழங்கியுள்ளோமோ அதை ஓதுவதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு அவர்கள் அதனை ஓதுகின்றனர். (2:122)* என்று இறைவன் கூறியுள்ளானோ அந்த மக்களைச் சார்ந்தவர்களாக நாம் ஆக வேண்டியது அவசியமானது ஆகும். அதாவது திருக்குர்ஆனை ஓதுவதற்குரிய உரிமைகளையும் அவர்கள் செலுத்துகின்றனர். அதைப் பற்றி சிந்திப்பதற்குரிய உரிமையையும் அவர்கள் செலுத்துகின்றனர். எதனை படித்தார்களோ அல்லது கேட்டார்களோ அல்லது சிந்தித்தார்களோ அதற்கேற்ப செயல்படுவதற்குரிய உரிமையையும் அவர்கள் செலுத்துகின்றனர்

இந்த உரிமை செலுத்தப்படவில்லை என்றால் நாம் முஸ்லிம்களாக இருக்கின்றோம் என்ற நமது வாதம் நாவளவில் மட்டும் இருக்கும் வாதமாகும். இந்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கவலையை அதிகமாக்குகின்ற அந்த மக்களைச் சார்ந்தவர்களாக நாம் ஆகி விடுவோம். இறுதிக் காலத்தில் வரவிருந்த அந்த மக்கள் திருக்குர்ஆனை ஓதுவது மற்றும் அதற்கேற்ப செயல்படுவது ஆகியவற்றிற்குரிய உரிமையைச் செலுத்தாதவர்களாக இருப்பார்கள். அவர்களைப் பற்றி திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

وَقَالَ الرَّسُوْلُ يٰرَبِّ اِنَّ قَوْمِي اتَّخَذُوْا هٰذَا الْقُرْاٰنَ مَهْجُوْرًا ﴿٣١﴾

*என் இறைவா! நிச்சயமாக எனது சமுதாயம் இந்த குர்ஆனை கை விட்டு விட்டதே என்று தூதர் கூறுவார். (25:31)*

இந்த மாதம் எங்கு நமக்கு பல நற்செய்திகளையும் வழங்கி இருக்கின்றதோ அங்கு நம்மீது பல பொறுப்புகளையும் அது சுமத்துகின்றது. நம்மை எச்சரிக்கவும் செய்கின்றது. எந்த அளவு நீங்கள் திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப செயல்படுகின்றீர்கள் என்பதைப் பற்றி உங்களை நீங்களே ஆய்வு செய்து பாருங்கள் என்று இந்த மாதம் நமக்கு நினைவூட்டுகின்றது. எந்த அளவு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கவலையை அகற்றுவதற்கு காரணமாக நீங்கள் ஆகியுள்ளீர்கள்? என்பதை நீங்களே ஆய்வு செய்து பாருங்கள் என்று இந்த மாதம் நமக்கு

நினைவூட்டுகின்றது. அவ்வாறு இல்லையென்றால் ரமலானும் நமக்கு எந்த பயனையும் தர முடியாது. திருக்குர்ஆனும் எந்தப் பயனையும் தராது.

இறைவன் நம்மை எப்படிப்பட்ட மனிதனாகவும் மூஃமினாகவும் ஆக்க விரும்புகின்றானோ அதற்காக அவன் திருக்குர்ஆனில் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் கட்டளைகளை நமக்கு வழங்கியுள்ளான். இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக நமது சீர்திருத்தத்தின் பக்கம் அவன் நமக்கு கவனமூட்டியுள்ளான். திருக்குர்ஆனின் அழகிய போதனைகளை தனது செயலில் செய்து காட்டியதன் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதற்கு வலிமையூட்டினார்கள். ரமலானும் குர்ஆனும் நமக்கு எந்த விசயங்களை நினைவூட்டுகின்றது என்பதைப் பற்றி நான் சிலவற்றைக் கூறியுள்ளேன். ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்றே திருக்குர்ஆனில் நூற்றுக்கணக்கான கட்டளைகள் உள்ளன. அவற்றை தேடி அறிந்து நாம் அதற்கேற்ப நமது வாழ்க்கையைக் கழிப்பது அவசியமானதாகும். மேலும் இது அல்லாஹ்வின் அருளின் மூலமாகத்தான் சாத்தியமாகும். அவனது அருளைப் பெறுவதற்காக அவன் நமக்கு துஆக்களின் பக்கம் கவனமூட்டியுள்ளான்.

அல்லாஹ் மூஃமின்களுக்குரிய சிறப்பு அம்சங்களாக கூறியவற்றிலிருந்தும் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள கட்டளைகளில் இருந்தும் இப்போது நான் இரண்டு விசயங்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். இந்த விசயங்கள் பரஸ்பரம் நம்மில் ஒருவர் மற்றவருடன் கொண்டுள்ள தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் சமுதாயத்தில் அமைதி நிலவுவதற்கும் அவசியமானதாகும். இதனால் கிடைக்கக் கூடிய உண்மையான பலனும் நிச்சயமாக கிடைத்து விடுகின்றது. எவ்வாறு இறைவனின் ஏனைய கட்டளைகளுக்கேற்ப செயல்படுவதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கம் ஒருவருக்கு கிடைக்கின்றதோ அவ்வாறே இந்த விசயங்களைச் செயல்படுத்துவதன் மூலமாகவும் அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்கும்.

அவற்றில் முதலாவது விசயம், பணிவு மற்றும் தாழ்மைக் குணத்தை கடைபிடிப்பதாகும். இவற்றை கடைபிடிப்பதன் மூலமாக பல பிரச்சனைகளுக்கான தீர்வை காண முடியும். அல்லாஹ் தனது அடியார்களுக்குரிய சிறப்பம்சங்களை எடுத்துக் கூறும் போது, உண்மையான முஸ்லிம்களாகத் திகழும் அந்த அடியார்களின் சிறப்பம்சங்களைப் பற்றி எடுத்துக் கூறும் போது, இறைவனை வணங்குகின்ற அடியார்களைப் பற்றி கூறும் போது, ரஹ்மானான இறைவனின் கருணையையும் அருளையும் தேடுகின்ற அடியார்களின் சிறப்பம்சங்களைப் பற்றி கூறும் போது அவர்களின் மிகப்பெரும் ஒரு சிறப்பு அம்சமாக,

وَعِبَادُ الرَّحْمٰنِ الَّذِيْنَ يَمْشُوْنَ عَلَى الْاَرْضِ هَوْنًا

*அளவற்ற அருளாளனாகிய இறைவனின் உண்மையான அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பவராவர் (25:64)* என்று கூறுகின்றான்.

**பிறகு கூறுகின்றான்:**

وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِي الْاَرْضِ مَرَحًا ۗ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُوْرٍ ﴿١٩﴾

*நீ மனிதர்களிடத்து உன் கன்னத்தைக் கர்வத்தால் பொங்கச் செய்யாதே! பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதே! நிச்சயமாக கர்வங் கொண்டவன் பெருமையடிப்பவன் எவனையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (31:19)*

அல்லாஹ்வின் அன்பு கிடைக்காமல் போனால் பிறகு மனிதனின் எந்த நன்மையும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றதாக ஆகி விடுகின்றது. அல்லாஹ்வின் உதவி அவருக்கு கிடைக்காது.

ஒருபுறம் இறைவன் மீது நம்பிக்கை இருப்பதாக வாதம் செய்து விட்டு, நான் மூஃமினாக இருக்கின்றேன் என்று வாதம் செய்து விட்டு மறுபுறம் இறைவனின் நேசம் கிடைக்க வேண்டும் என்பதைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை என்று எந்த மனிதனால் கூற முடியும்? நிச்சயமாக அறிவுள்ள ஒரு மனிதன், ஒரு முஸ்லிம் இவ்வாறு கூறமாட்டான். ஆனால் செயலளவில் நாம் பார்க்கும் போது அன்றாடம் ஏற்படுகின்ற பல பிரச்சனைகளுக்குக் காரணமாகவும், பல சண்டைகளுக்கு அடித்தளமாகவும் இருப்பது இந்த ஆணவமேயாகும். எவரிடம் கர்வமும் கர்வம் காரணமாக ஏற்படும் பொய்யான தற்பெருமையும் இல்லையோ அவரது விவகாரங்களில் ஒருபோதும் சிக்கல் ஏற்படுவதில்லை. இந்த ஆணவம் தான் மனிதனை பிடிவாதத்தின் பக்கம் கொண்டு செல்கிறது. தற்பெருமையும் கர்வமும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்குப் பதிலாக அவற்றை நீளமாக்குவதுடன் சிக்கலானதாக அவற்றை ஆக்க

ஆரம்பித்து விடுகின்றது. இன்றைய நாட்களில் பல சண்டைகளும் எனக்கு முன்னால் கொண்டு வரப்படுகின்றது. அவற்றின் பெரும்பாலானவற்றிற்கு தீர்வு காண முடியாமல் போவதற்குக் காரணம், கர்வம், தற்பெருமை, பிடிவாதம் ஆகியவை அவற்றிற்கிடையில் வருவதாகும்.

எனவே மனிதனுக்கு இறைவனின் நேசம் கிடைக்க வேண்டும் என்றால், ஒருவர் தன்னை முஸ்லிம் என்று கருதும் போது, நான் முஸ்லிம் என்று கூறும் போது முதலாவதாக அஹ்மதி முஸ்லிம்களைப் பார்த்தே கூறுகிறேன். ஒருவர் தன்னை முஸ்லிமாக கருதுகின்ற போது அவர் இந்த விசயங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும். திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப செயல்படும் போதுதான் ரமலானின் அருள்கள் கிடைக்கின்றது. திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப செயல்படும் போதுதான் நோன்புகள் உங்களுக்கு பலனைத் தரும். எனவே எவர்களுக்கிடையில் சண்டைகள் தற்பெருமை மற்றும் கர்வம் காரணமாக நீளமாகிக் கொண்டே செல்கிறதோ அவர்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டியது கர்வத்தின் காரணமாகத்தான் சண்டைகள் ஏற்படுகின்றன. அல்லது தற்பெருமையின் காரணமாக அவை ஏற்படுகின்றன. அவர்கள் இந்த ரமலானில் பணிவை மேற்கொண்டவாறு சமாதானத்தின் பக்கம் கை நீட்ட வேண்டும். அல்லாஹ்வின் அன்பை ஈர்ப்பதற்காக பூமியில் பணிவுடன் நடக்கின்ற ரஹ்மானின் அடியார்களில் ஒருவராக அவர் ஆக வேண்டும். அவ்வடியார்கள் எல்லா சமயமும் நமது இறைவன் நம்மிடம் திருப்தி அடைய வேண்டும் என்ற பேராசை கொண்டவர்களாக இருக்கின்றனர். அதற்காக அவர்கள் உலக இழப்பை சகித்துக் கொள்ள வேண்டியது வந்தாலும் சரியே!

இரண்டாவதாக நான் கூற விரும்பிய விசயமும் இதனோடு தொடர்புடையதாகும். அது பொறுமை ஆகும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ *அதாவது அல்லாஹ்விடம் பொறுமை மற்றும் துஆவின் மூலம் உதவி கேளுங்கள். (2:46)*

ஒவ்வொரு நொடியும் அல்லாஹ்வின் உதவி தேவைப்படாதவர் யார்தான் இருக்க முடியும்? ஆனால் இந்த உதவி பொறுமை மற்றும் துஆவின் மூலமாகத்தான் கிடைக்கும்.

ஆனால் அல்லாஹ் கூறுகின்றான்: பணிவை மேற்கொண்டு நடக்கின்றவரால் தான் பொறுமை மற்றும் துஆவிற்கான உரிமையைச் செலுத்த முடியும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

وَاِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَ *பணிவையும், தாழ்மைக் குணத்தையும் கடைபிடிப்பவர் -களைத் தவிர மற்றவர்களுக்கு இது கடினமான விசயமாகும். (2:46)*

இங்கு பணிவை மேற்கொள்வதை பொறுமை மற்றும் துஆவுடன் இணைத்துக் கூறி அல்லாஹ்வின் உதவியைப் பெறுவதற்கான வழியாக அவை ஆக்கப்பட்டுள்ளன. அல்லாஹ்விடமிருந்து உதவி துஆவின் பக்கம் கவனம் செலுத்துவதன் மூலமும் பொறுமையின் மூலமும் கிடைக்கின்றது என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த சிறப்பம்சம் பணிவை மேற்கொள்பவர்களிடம்தான் இருக்கும். இந்தப் பணிவை மேற்கொள்வது என்பது இறைவனின் கட்டளைகளுக்கேற்ப செயல்படுபவர்களின் நடைமுறையாகும். இந்தப் பணிவை மேற்கொளவது என்பது இறைவனை வணங்குபவர்களது நடைமுறையாகும்.

எனவே எல்லா மட்டத்திலும் பணிவை மேற்கொண்டு நடப்பது இருந்தால், அல்லாஹ் தனக்கென்று செலுத்தும்படி கூறியுள்ள உரிமைகளை துஆவுடனும் உறுதியான நிலைநிற்றலுடனும் செலுத்தினால் மிகுந்த பணிவுடன் மனிதன் இறைவனது சன்னிதியில் வீழ்ந்து கிடந்தால் பிறகு அப்படிப்பட்டவருக்கு இறைவனின் உதவி கிடைக்கும்.

அல்லாஹ் தனது அடியார்களுக்கு செலுத்தும்படி கூறியுள்ள உரிமைகளைச் செலுத்துவதற்கான ஆற்றலையும் இறைவனிடம் கேட்க வேண்டும். பரந்த மன தைரியத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அப்போது தான் இறைவனது அருள்களுக்கு நீங்கள் வாரிசாவீர்கள்.

எல்லா மட்டத்திலும் உள்ள விவகாரங்களிலும் இறைவணக்கத்தை நிறைவேற்றுவதிலும் அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்குப் பணிவு மிகவும் அவசியமானதாகும். இது இருந்தால் பிறகு அல்லாஹ் உலக இழப்புகளிலிருந்தும் நம்மை காப்பாற்றுவான். எதிரிகளுக்கு எதிராகவும் உதவி செய்வான். ஆன்மீகத்திலும் முன்னேற்றம் ஏற்படும். சமுதாய தொடர்புகளிலும் அழகு உருவாகும். மனிதன் இறைவனின் திருப்தியைப் பெறுபவனாக ஆகி விடுவான். இதுவே ஒரு நம்பிக்கையாளரின் ஆசையாக இருக்கின்றது. ஆசையாக இருக்கவும் வேண்டும்.

எனவே இந்த ரமலானில் நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நான் கூறியுள்ள விசயங்களின் அடிப்படையில் உங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எந்த அளவு இந்த ரமலானில் நாம் நமது நிலைமைகளை இறைவன் கூறியுள்ள போதனைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொள்வதற்கான திட்டத்தைத் தீட்டினோம். எந்த அளவு இதன் பக்கம் நம் பாதங்களை எடுத்து வைக்க ஆரம்பித்துள்ளோம் என்று நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

அவ்வாறில்லையென்றால், நான் ஏற்கனவே கூறியது போன்றே ரமலான் ஒவ்வொரு வருடமும் வருகின்றது. ஒவ்வொரு வருடமும் வரும். நமது உயிர் உள்ளவரை ஒவ்வொரு வருடமும் இந்த மாதத்தைக் கழித்தவாறு திருக்குர்ஆன் இந்த மாதத்தில் இறங்கியது பற்றிய அறிவார்ந்த வாதங்களைக் கேட்டுக் கொண்டே இருப்போம். அல்லாஹ் *இது மக்களுக்கு நேர்வழி காட்டக் கூடியதாக இருக்கின்றது (2:186)* என்று கூறி இவற்றை உங்கள் வரை மட்டும் வைத்திருக்க வேண்டாம். திருக்குர்ஆன் இறங்கியது என்பதன் பொருள் என்ன? இதற்கு என்ன பொருள் இருக்க முடியாது? என்ற விவாதங்களில் ஆழமான பார்வையுடன் இந்த நேர்வழியின் முத்துக்களைத் தேடி அவற்றை உங்களது இம்மையையும் மறுமையையும் சரிசெய்து கொள்வதற்கான வழியாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆன் உண்மையான அருள்களின் தலையூற்றும் இரட்சிப்பின் உண்மையான வழியும் ஆகும். திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப செயல்படாமல் இருப்பது இம்மக்களின் தவறாகும். செயல்படாமல் இருப்பவர்களில் ஒரு பிரிவினர் யாரென்றால் அவர்களுக்கு இதன் மீது நம்பிக்கையே இல்லை. அவர்கள் இதனை இறைவனின் வேதமென்றே கருதவில்லை. இந்த மக்கள் மிகவும் தொலைவில் விலகிச் சென்று விட்டனர்.

ஆனால், எந்த மக்கள் இது இறைவனின் வேதமாகும் என்று நம்பிக்கை கொண்டுள்ளனரோ, மேலும் இரட்சிப்பிற்கான குணமளிக்கக்கூடிய மருந்தாக அதை கருதுகின்றனரோ அவர்கள் இதற்கேற்ப செயல்படாமல் இருப்பது எந்த அளவு வியப்பிற்குரிய, வேதனைக்குரிய விசயமாக இருக்கின்றது? அவர்களில் பலரும் எப்படிப்பட்டவர்களாக உள்ளனர் என்றால் தங்களது முழு வாழ்நாளிலும் அவர்கள் அதை படிக்கவே இல்லை. இறைவனது வசனத்தை விட்டும் இந்த அளவு கவனமற்றவராகவும் அதை பொருட்படுத்தாதவராகவும் இருக்கும் மனிதனுக்கு உதாரணமானது, ஒரு நபருக்கு இந்த நீரூற்று மிகவும் தூய்மையானதும் சுவையானதும் என்றும் அதன் தண்ணீர் பல நோய்களுக்கு மருந்தாகவும் நிவாரணமாகவும் இருக்கின்றது என்ற உறுதியான அறிவு இருக்கின்றது. அப்படிப்பட்ட அறிவு இருந்தும் கூட அவர் தாகித்திருக்கும் நிலையிலும் பல நோய்கள் அவருக்கு இருந்தும் கூட அவர் அதற்கருகில் செல்வதில்லை. அப்படிப்பட்ட மனிதருக்கு எப்படிப்பட்ட துர்பாக்கிய நிலையும் அறியாமையும் ஏற்பட்டிருக்கின்றது. அவர் அந்த நீரூற்றை தனது நாவால் சுவைத்திருக்க வேண்டும். தாகம் தீரும் அளவு தண்ணீரை குடித்து அதன் சுவையிலிருந்தும் குணமளிக்கக்கூடிய அந்த தண்ணீரை குடித்தும் இன்பத்தைப் பெற்றிருக்க வேண்டும். அறிவு இருந்தும் கூட அறிவற்றவர் போன்று அவர் அதை விட்டும் தூரத்தில் விலகி இருக்கின்றார். மரணம் வந்து அவரை அழித்து விடும் வரையில் அவர் அதனை விட்டும் தூரத்தில் விலகியே இருக்கின்றார். இத்தகைய நபரின் நிலை படிப்பினை பெறத்தக்கதும் அறிவுரையைப் பேணி நடக்கத்தக்கதுமான நிலையைக் கொண்டதாக இருக்கின்றது. முஸ்லிம்களின் நிலையும் இப்போது இப்படித்தான் ஆகிக் கொண்டிருக்கின்றது. எல்லாவித முன்னேற்றம் மற்றும் வெற்றிகளின் திறவுகோல் இந்த திருக்குர்ஆன் தான் என்பது அவர்களுக்கு தெரியும். அவற்றிற்கேற்ப அவர்கள் செயல்பட வேண்டும். ஆனால் அதனை அவர்கள் பொருட்படுத்துவதே இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முஸ்லிம்களுக்கு இது அவசியமானதாகும். இப்போதும் அவர்களுக்கு இதுவே அவசியமானதாகும். அவர்கள் இந்த நீரூற்றை மகத்தான அருளாகக் கருத வேண்டும். அதற்கு மதிப்பளிக்க வேண்டும். அதற்கு மதிப்பளிப்பது என்பது அதற்கேற்ப செயல்படுவதாகும். பிறகு அல்லாஹ் அவர்களது துன்பங்களையும் துயரங்களையும் எப்படி அகற்றுகின்றான்? என்பதை அவர்கள் பார்க்கட்டும்! அந்தோ! முஸ்லிம்கள் இதைப் புரிந்து இதைப் பற்றி சிந்தனை செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்காக ஒரு நல்ல வழியை உருவாக்கியுள்ளான். அதில் நடந்து சென்று அவர்கள் பலன் அடைய வேண்டும்.

அந்தோ! இன்றும் இஸ்லாமிய உலகில் என்ன நடக்கின்றது? என்றால் தலைவர்களும் குடிமக்களும் பரஸ்பரம் ஒருவர் மற்றவரது கழுத்தை அறுப்பதற்கு முயற்சி செய்து வருகின்றனர். முஸ்லிம்களில் ஒருவர் மற்றவரது உயிரை மாய்க்கின்றார். நூற்றுக்கணக்கான மரணங்கள் இதனால் நிகழ்ந்துள்ளது. இவர்கள் திருக்குர்ஆனின்

போதனைகளுக்கேற்ப செயல்படுபவர்களாக இருந்தால், காலத்தின் மஹ்தி கூறும் விசயங்களைக் கேட்பவர்களாக இருந்தால் இந்த குழப்பம் முடிவுக்கு வந்திருக்கும். அல்லாஹ் இந்த முஸ்லிம்களுக்கு அன்பை வழங்குவானாக! இவர்கள் திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப செயல்படக் கூடியவர்களாக இருப்பார்களாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனை கருத்தூன்றி சிந்தித்துப் பாருங்கள். அதில் எல்லாமே இருக்கின்றது. நன்மைகள், தீமைகள் பற்றிய விளக்கம் இருக்கின்றது. எதிர்காலத்தைப் பற்றிய செய்திகளும் அதில் இருக்கின்றன. இன்னும் பல செய்திகளும் அதில் உள்ளன. நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள்! திருக்குர்ஆன் கூறுகின்ற மார்க்கத்திற்கு எதிராக எந்த ஆட்சேபனையும் செய்ய முடியாது. இதன் அருள்களும் பலன்களும் புத்தம் புதிதாக கிடைத்துள்ளன. பைபிளில் இதன் போதனை அந்தக் காலத்தின் நிலைமைக்கேற்ப இருக்கலாம். ஆனால் எப்போதும் எல்லா நிலைமைகளுக்கு ஏற்பவும் ஒருபோதும் அதன் போதனைகள் அமையவில்லை. இந்த பெருமை திருக்குர்ஆனுக்கே இருக்கின்றது. அல்லாஹ் அதில் ஒவ்வொரு நோய்க்குமான சிகிச்சையை எடுத்துக் கூறியுள்ளான். எல்லா ஆற்றல்களுக்குரிய பயிற்சியை அதன் மூலம் வழங்கியுள்ளான். எந்த தீமை வெளிப்பட்டுள்ளதோ அதை அகற்றுவதற்கான வழியையும் அது கூறி இருக்கின்றது. எனவே திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருங்கள். துஆ செய்து கொண்டிருங்கள். உங்களது நடத்தைகளை இதன் போதனைகளுக்கு ஏற்ப வைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

இந்த போதனை நமக்குரியதாகும். நாம் அந்நியர்களை மட்டும் பார்க்கக் கூடாது. நாமும் திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப செயல்பட வேண்டும். அதன் போதனைகளின் கீழ் நம்மை வைத்திருக்க முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் நமது இம்மையும் மறுமையும் சரியாகி விட வேண்டும்.

அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக! நாம் இந்த மகத்தான வேத நூலின் போதனைகளை நமது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொண்டு அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்களாக நாம் ஆவோமாக! இந்த ரமலான் நமக்கு முன்பை விட அதிகமாக திருக்குர்ஆனின் அறிவையும் ஞானத்தையும் நமக்கு வழங்கக் கூடியதாக இருக்கட்டுமாக! மேலும் இது நமக்கு இறை நெருக்கத்தைத் தரக்கூடியதாகவும் இருக்கட்டுமாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at **BAIT-UL-FUTUH MOSQUE,** London

on **19.07.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456